தமிழால் தழைக்கும் உலகு

# நற்றமிழ்க்குடில்

## மாணவ இலக்கிய மின்னிதழ்




**தமிழ்த்துறை**

**சோகா தமிழ்ப் பேரவை வெளியீடு**

**சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி**

சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099

044-26863177, 9677717455, 9677717456

sokatamilavai2023@gmail.com

sokaikeda2000@gmail.com



**செப்டம்பர் 2023**

**குடில் 5**

**விருந்து 18**

# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

**மாணவ இலக்கிய மின்னிதழ்**

**குடில் 5**

**விருந்து 18**

**செப்டம்பர் 2023**

**தமிழ்த்துறை**

**சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு**

**சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி**

சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.

# நற்றமிழ்க்குடில்

ஆசிரியர் குழு : மோ. ஐஸ்வரியா, முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு
மா. ஜெகதீஸ்வரி, முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு
வி. மாரிகவிதா, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு
து. லீலாவதி, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு

ஆலோசனைக் குழு : டாக்டர் சேது குமணன், கல்லூரித் தலைவர்
முனைவர் மீரா முருகேசன், கல்லூரி முதல்வர்
முனைவர் கண்மணி சுப்பிரமணியன், கல்லூரித் துணை முதல்வர்
முனைவர் தே. இராணி எலிசபெத், தமிழ்த்துறைத் தலைவர்
தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

வெளியீடு : தமிழ்த்துறை
சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு
சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.

*Blog* : *sokatamil blogspot.com*
*Facebook* : *Soka Tamil Avai*
*Youtube* : *Sokatamilavai*
*E.mail* : *sokatamilavai2023@gmail.com*

# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

### மாணவ இலக்கிய மின்னிதழ்

### குடில் 5

### விருந்து 18

## செப்டம்பர் 2023

# உள்ளே....

## ஆய்வுக் கட்டுரைகள்

ஆய்வுக் கட்டுரை – ஒன்று

## அகிலன் படைப்பில் கற்பகமும் கற்பகத்தின் இயலாமையும்

**மு. ரம்யா**

**இளங்கலைத் தமிழ் முன்றாமாண்டு**

**முன்னுரை**

ஐந்து பூதங்களில் கண்ணுக்குத் தெரியாமல் நாம் உயிர் வாழவும் பூமி ஆரோக்கியமாக இருக்கவும் பங்காற்றி வருவது காற்று. மனிதர்கள் உயிர் வாழ உணவு போன்றவை தேவைதான். என்றாலும் இவை அனைத்தும் இருந்தும் ஓர் இடத்தில் காற்று இல்லை என்றால் மனிதனால் வாழ முடியாது. உடல் இயங்குவதற்கான சக்தியை உருவாக்குவது காற்று. காற்று என்பது வளிமண்டலத்தில் ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நகரும் நிலையைக் குறிக்கும் அதுபோல் கற்பகம் என்ற கதாப்பாத்திரம் வீட்டிலிருந்து வெளியே செல்லும் எண்ணத்தைக் காற்றுடன் ஒப்பிட்டு அகிலனின் இச்சிறுகதை கூறுகின்றது.

**கதாபாத்திரம்**

கற்பகம்

வேதகிரி (அப்பா)

வேதகிரியின் மனைவி (அம்மா)

கற்பகத்தின் தம்பி

**கதையின் கரு**

கற்பகம் ஓர் ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவள். அவளின் தந்தை வேதகிரி சிறு ஜவுளி கடையில் மாதம் நாற்பத்தி எட்டு ரூபாய்க்கு வேலைப் பார்க்கிறார். அதில் பத்து ரூபாய் வீடு வாடகைக்கு என்று எடுத்து வைத்து விடுவார். வேதகிரியின் மனைவிக்கு நான்கு குழந்தைகள் அதில் முதல் இரண்டு குழந்தைகள் இறந்துவிட்டன. மூன்றாவதாகக் கற்பகம், நான்காவதாக ஓர் ஆண் குழந்தை. சென்னை மாநகர விலைவாசிக்கு ஏற்ப 10 ரூபாயாக இருந்த வீட்டு வாடகை 7 மடங்காக உயர்ந்துவிட்டது. அதற்கு வேதகிரி பத்து ரூபாயை அடுப்பங்கரைக்கு மட்டும் வாடகை கொடுத்துத் தங்கியிருந்தார். கற்பகத்துக்கு விவரம் தெரிந்ததிலிருந்து, அவள் அந்த அடுப்பங்கரையிலேயே தான் இருந்து வந்தாள். அவர்கள் வசிக்கும் தெருவில் ஒரு வீட்டுத்திண்ணை மட்டும் தான் இருந்தது. அது அவளின் வீட்டில் இருந்து நான்கு வீடுகள் தள்ளி உள்ளது. அதுதான் அவளுடைய உலகமாக இருந்தது.

ஒரு நாள் அவளும், அவள் தம்பியை அழைத்துக்கொண்டு நண்பர்களுடன் விளையாடச் சென்றிருந்தால் அப்பொழுது கேலியும் கூத்துமாக விளையாடிக் கொண்டு இருந்தனர். அவற்றின் வெளிப்பாடாக அவர்களின் சத்தம் தெருவை அதிரும் படியாகச் செய்தது. அச்சத்ததைக் கேட்டுக்கொண்டு வெளிவந்த வீட்டுக்கார ஆசாமி கற்பகத்துடன் விளையாடிக் கொண்டிருந்த ஒருவனை எட்டி உதைத்துத் தெருவில் தள்ளிக் கற்பகத்தின் தலைமுடியை எட்டி பிடித்து

இனிமேல் இங்கு விளையாட வருவாயா வருவாயா என்று கேட்டுக் கன்னத்தில் பத்துப் பதினைந்து அடியாவது அடித்திருப்பார். அந்த ஐந்து வயது சிறுமி அடியின் விளைவாகப் புத்தி பேதலித்த மாதிரி அழக்கூட முடியாமல் திகைத்துப் போய் நின்றாள். ரோட்டில் சென்ற ஒருவர் அவனைத் தள்ளி விட்டுக் குழந்தையை வீட்டிற்குப் போ என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

வீட்டிற்கு வரும் வழியில் எதிரில் கற்பகத்தின் தாய் வருகிறாள் அதைக் கூடக் காணாமல் திகைத்துப் போய் நிற்கிறாள். அவளைப் பார்த்து அவளின் தாய் யாரிடம் போய் அடி வாங்கி வந்தாய் என்று கேட்டுத் திட்டினாள். அம்மாவிடம் சொன்னால் மேலும் அடி வாங்க வேண்டும் என்று நினைத்து அம்மாவிடம் சொல்லாமலேயே அமைதியைக் காத்தால் அழுகை இல்லாமல், அப்பா வந்தவுடன் அப்பாவிடம் அனைத்து உண்மைகளையும் கூறி அழுதாள். அப்பா அவள் கன்னத்தைப் பார்த்துக் கண்ணீர் வடித்தார். இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று நினைத்து யோசித்துக்கொண்டே ஜவுளி கடைக்குச் சென்றார். அப்போது அவருக்குக் கற்பகத்தைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து விடலாம் என்ற நினைப்பு வந்தது.

**பள்ளி வாழ்க்கை**

பெண்கள் ஊது குழலைக் கையில் எடுப்பதை விட்டுவிட்டு அடுப்பங்கரையில் இருந்து வெளிவந்து எழுதுகோலைக் கையிலெடுக்க வேண்டும். பெண்களுக்கும் சிந்திக்கும் மூளை உண்டு ஆணுக்கு நிகராக

எவ்விதத்திலும் சளைத்தவள் இல்லை என்று எண்ணுதல் வேண்டும். ஆயிரம் ஆலயங்கள் கட்டப்படுவதைவிட ஒரு பாடசாலையைக் கட்டுவதே சாலச் சிறந்தது என மகாகவி கூறிய வரிகளுக்கு ஏற்பப் பெண்கள் நடக்க வேண்டும். கையில் புத்தகத்துடன் இருக்கும் கல்வி கற்கும் பெண்களைக் கண்டு, அடக்குமுறையாளர்கள் பெரும் பயம் கொள்வார்கள் எனும் பொன்மொழி உண்மையாக வேண்டும்.

மலாலாவின் பொன்மொழிக்கு ஏற்ப நல்ல நாளில் கற்பகத்தைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிடலாம் என்று வேதகிரி பள்ளிக்கூடத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு மாணவியாகச் சேர்த்துக் கொண்டனர் கட்டணத்திற்கு ஒரு ரூபாய் செலவாயிற்று. வேறு எந்தச் செலவும் இல்லை. ஆசிரியரிடம் 45 நாட்களில் புத்தகத்தை வாங்கித் தந்து விடுகிறேன் என்று சொன்னார். கற்பகத்திடம் பள்ளிக்கூடம் விட்டு நேராக வீட்டிற்கு வந்திடனும். பக்கத்து வீட்டுப் பசங்களோடு வந்துவிடு ரோட்டில் பஸ் போகும் பார்த்து வரணும் கற்பகம் என்று சொல்லி விட்டு ஜவுளி கடைக்குச் சென்றுவிட்டார். கற்பகம் வாழ்வில் உண்மையிலேயே ஒரு புதுயுகம் ஆரம்பமாகிவிட்டது. விடுமுறை நாட்களில் கூட அவள் பள்ளிக்குச் சென்று அமர்ந்து விட்டு வருவாள், திண்ணை இல்லாத குறை அவளுக்கு மறைந்துவிட்டது. குறித்த நேரத்தில் பள்ளிக்கூடம் சென்று குறித்த நேரத்திற்கு வீட்டிற்கு வருகிறாள். இதைப் பார்த்து

ஒரு பெரிய பிரச்சினை தீர்ந்துவிட்டது என்று தாயும் தந்தையும் மூச்சு விட்டார்கள்.

பள்ளிக்கூடத்திற்குச் சென்ற கற்பகத்திடம் அவர் ஆசிரியர் ஒரு மாதம் விடுமுறை விடப் போவதாகக் கூறினார். அதைக் கேட்ட கற்பகம் மிகவும் சந்தோஷம் அடைந்து ஏழெட்டு மாதங்களுக்கு முன் சாந்தோம் கடற்கரைக்குச் சென்றிருந்த நினைவுகளை எண்ணி மகிழ்ச்சி அடைந்தாள். மீண்டும் இந்த விடுமுறைக்கு அந்தக் கடற்கரைக்குச் செல்ல வேண்டும் என்று எண்ணிக்கொண்டே அமர்ந்திருந்தாள். பள்ளிக்கூட மணி ஒலித்த உடன் முதல் ஆளாகப் புத்தகப் பையை எடுத்துக்கொண்டு பள்ளியை விட்டுச் சென்றாள்.

இந்த உலகிற்குப் பல ஒழுக்கமுள்ள மனிதர்களை உருவாக்கும் பயிற்சிக் கூடம் சிறு வயதிலிருந்தே முற்போக்கு சிந்தனைகளையும் ஒரு மனிதன் இந்தச் சமுதாயத்தில் எப்படி வாழவேண்டும் என்று மாணவர்களுக்கு அறிவு புகட்டும் அறிவுக்கூடம் தான் இப்பள்ளி கூடம். அத்தகைய பள்ளி வாழ்க்கையில் கற்பகம் இத்தனை ஆண்டுகள் எண்ணிக்கொண்டிருந்த ஆசை எண்ணங்கள் அனைத்தும் நிறைவேறியதால் கற்பகம் மகிழ்ச்சியோடு இருக்கிறாள்.

**முறையான வழிகாட்டல்**

பக்கத்து வீட்டுத் திண்ணைக்குப் போய் அடி வாங்கி வந்த கற்பகத்தைப் பார்த்தும், அடித்தவர்கள் மீது கோபம் வரவில்லை. ஏன் அடி வாங்கி வந்தாய் என்று கற்பகத்தைத் தான் திட்டி அடித்தாள். கற்பகத்தின் தாய் தன் வீட்டில் ஒரு

திண்ணை இருந்தால், தன் மகள் ஏன் பிற வீட்டுக்குப் போய்த் தேவையில்லாமல் அடி வாங்கி வரப்போகிறாள் என்று எண்ணவில்லை. பிள்ளைப் பேறு என்பது இறைவன் கொடுத்த வரம். அத்தகைய வரத்தைப் பெற்றாலும் பெற்ற குழந்தையானது, தன் துன்பத்தைத் தாயிடம் சொல்லக்கூடத் தயங்கிய மகளைக் கண்டும் தாய் பரிதாபப் படவில்லை. ஐந்து வயதாகிய கற்பகம் வறுமையான குடும்பத்தில் பிறந்ததால் தான் தன்னுடைய ஆசை எண்ணங்கள் அனைத்தும் தன்னுள்ளே பூட்டி வைத்துக் கொண்ட சூழ்நிலை உருவாகியது.

அவள் தந்தை சரியான வழிகாட்டியாகச் செயல்பட்டார். சிறுகுழந்தைக்குக் குடும்ப வறுமையைப் பற்றிய அக்கறை இல்லை. அவளுடைய ஆசையையே பெரிதாக எண்ணினாள். குழந்தையின் மனநிலையையும் திண்ணையில்லாமல் அவள் வேதனையும் உணர்ந்து உளவியல் ரீதியாக மாற்றத்தைக் கொண்டு வர அவள் தந்தை, அவளைப் பள்ளிக் கூடத்தில் சேர்த்தார். அவளுக்குத் திண்ணைக் கிடைத்த மகிழ்ச்சி. தந்தைக்கு கல்வி அளித்த மகிழ்ச்சி.

**தனிமையும் கட்டுப்பாடும்**

கற்பகம் வீட்டில் அடைந்து இருக்காமல் வெளியேச் சென்று விளையாடும் ஆசை உடையவள். அவளின் சுதந்திரத்தைக் கெடுக்கும் தாயின் கட்டுப்பாட்டை எண்ணிக் கற்பகம் தன்னைத் தானே தனிமை படுத்திக்கொள்கிறாள். கற்பகத்தின் தாய் அவளின் மீது அன்பு இல்லாமல் மிகவும் கண்டிப்போடு

இருப்பதும் வேதகிரி தன் வறுமையின் காரணமாகத் தன் மகளின் ஆசையை எண்ணங்களை நிறைவேற்ற முடியாமல் போவதும், கற்பகத்தை வருத்தமடையச் செய்தது. கற்பகம் அவர்களின் நிலை புரியாத வயதில் தன்னைத்தானே தனிமை படுத்திக்கொண்டு ஆசைகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு வாழ்ந்தாள்.

**சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்**
**சுடச்சுட நோற்கிற் பவர்க்கு (குறள்:267)**

இக்குறளுக்கேற்ப தம்மைத் தாமே வருத்திக்கொண்ட கற்பகம் ஒரு குறிக்கோளுக்காகத் தனிமை எனும் துன்பங்கள் தாக்கினாலும் அவளைச் சுடச்சுட ஒளிவிடும் பொன்னைப்போல் புகழ் பெற்றே உயர்வாள். அதுபோல வேதகிரி அவளைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து விட்டார். அவளின் வாழ்க்கை நன்றாக இருந்ததைக் கண்ட தாய் தந்தை இருவரும் மகளின் கவலையின்றிப் பெருமூச்சு விட்டனர்.

**விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை**
**வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பாராம்**
**சாத்திரங்கள் பலபல கற்பராம்**
**சவுரியங்கள் பலபல செய்வராம்**
**மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பாராம்**
**மூடக் கட்டுக்கள் யாவும் தகர்ப்பராம்**
**காத்து மானிடர் செய்கை யனைத்தையும்**

**கடவுளர் இனிதாகச் சமைப்பராம்**

இவ்வாறு பாரதியின் கவிதை வரிகளுக்கு ஏற்பப் பெண்கள் தங்களின் ஆசைகளை எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளும் சுதந்திரம் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். பெண்களை வீட்டுக்குள்ளே வைத்துப் பூட்டி வைக்கக் கூடாது. அவர்களுக்கும் சுதந்திரம் கிடைக்க வேண்டும். பாரதி அன்றே பெண்விடுதலை பற்றி எழுதியிருக்கிறார். ஆனால் இக்கற்பகம் போன்ற சில பெண்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவ்வாறு இல்லாமல் விடுதலை உணர்வோடு சரித்திரம் படைக்கும் பெண்களாக வாழ வேண்டும்.

**முடிவுரை**

மற்றவர்கள் நம்மை இழிவாகப் பேசி நீ ஒன்றும் தெரியாத மடம் என்று சொன்னாலும், நம்முடைய வாழ்வை எந்த வகையிலும் தனக்குள்ளேயே ஒன்றுமில்லை தனக்கு ஏதும் தெரியாது என்று எண்ணாமல், ஆண்களும் பெண்களும் ஒன்றுதான். இருவரும் சரிநிகர் சமம்தான் என்று அனைவருக்கும் புரியவைத்து வாழவேண்டும். இக்கதையில் கற்பகம் தன்னுடைய எண்ணங்களையும் மனதுக்குள் வைத்துக் கொள்கிறாள். இவ்வாறு யாரும் இக்காலகட்டத்தில் இருக்க வாய்ப்பும் இல்லை இருக்கவும் முடியாது. கற்பகம் சிறு பெண்ணாகக் காட்டப்பட்டாலும் அவளுடைய வலியும் மாற்றமும் அனைவருக்கும் பொருந்தும்.

ஆய்வுக் கட்டுரை – இரண்டு

# உழைப்பின் முக்கியத்துவமும் மிட்டாய்க்காரனின் முட்டாள்தனமும்

**மு. திவ்யபாரதி, இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

**முன்னுரை**

ஜீவா ஜகந்நாதன் எழுதிய கதைகளுள் மிட்டாய்க்காரன் எனும் கதையில் முனுசாமி என்ற கதாபாத்திரத்தின் மூலமாக மிட்டாய் விற்கக்கூடிய சாதாரணமான மனிதனுடைய வாழ்க்கை முறையை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. “தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்” என்கின்றார் வள்ளுவர். அதாவது முன்வினையால் ஒரு காரியம் நடைபெறாமல் போனாலும் தனது, உடலை வருத்தி உழைக்கும் போது அதற்கான பலன் கிடைக்கும் என்பதே இதன் பொருள் ஆகும். நாம் முயற்சியுடன் உழைக்கும் போது வெற்றி நமக்குக் கிடைத்தே தீரும். உழைப்பே உயர்வு, உழைப்பே முழுச் சிந்தனை என்ற எண்ணத்தில் முழுமையாக உழைப்பை மட்டும் நம்பி வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய சாதாரணப் பாமர மகனின் கதையை மிட்டாய்காரன் மூலம் கதை ஆசிரியர் விளக்குகின்றார்.

**மிட்டாயும் – முனுசாமியும்**

மிட்டாய் வியாபாரம் செய்யும் முனுசாமி, அவனுடைய வியாபாரத்தையும் விளம்பரத்தையும் தனி மாதிரியாகவும், மற்றவர்களுக்கு முன்மாதிரியாகவும் செய்வான். அதுபோல் அவன் பிறர் கையை எதிர்பார்த்துப் பிழைப்பவன் அல்ல. தானே உழைத்து வியாபாரம் செய்து சம்பாதிப்பவன். அவனுக்கு உதவி என்கின்ற தேவையே இல்லை. இவன் உலகத்தின் எதிர்காலக் குடிமகனாகிய குழந்தைகளையே அவனுடைய வாடிக்கைகாரராகப் பார்ப்பவன். மாலைநேரத்தில் இவரிடமிருந்து குழந்தைகள் தேங்காய் மிட்டாய், வெங்காய மிட்டாய் வாங்கி வாயில் அடக்கிச் செல்வார்கள். எப்படியோ முனுசாமிக்கு, இந்த வியாபாரம் நிரந்தரமாக நடந்து வந்தது. திடீரென்று பிச்சை சோற்றில் சனி புகுந்தது போல வியாபாரத்தில் போட்டி உண்டானது. முன்னது போல் வியாபாரத்தில் பழைய லாபம் காணவில்லை. அவன் புதிய புதிய சரக்குகளை விற்கத் தொடங்கினான். கடலை உருண்டை, எள்ளுருண்டை, மாங்காய் கீற்று இவையெல்லாம் அவன் தட்டில் இருந்தன. ஒரு வாரத்திற்குத் தேவையான மிட்டாய்களை ஞாயிற்றுக்கிழமை அன்று வீட்டிலேயே தயாரித்து வைத்துக் கொள்வான்.

உழைப்பில்லாப் பிறப்பு இறப்பிற்குச் சமம் என்று குறிப்பிடுகின்றார்கள். மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் சோம்பல்தனத்தைக் கைவிட்டு, கடினமாக உழைத்தால் மட்டுமே வையகத்தில் வாழ்வாங்கு வாழ முடியும். கடின உழைப்பு

ஒருவரைச் சிறப்பான பாதைக்கு இட்டுச் செல்லும். எனவே, கடின உழைப்பை மூலதனமாகக் கொண்டு முனுசாமி முட்டாய் வியபாரத்தைச் செய்தான்.

**பள்ளிக்கூடம்**

முனுசாமிக்கு, பள்ளிக்கூடத்தைப் பற்றி தெரியும். ஆனால் படிப்பைப் பற்றித் தெரியாது. சங்கரன் செட்டியார் தெருவில் மேற்கே பார்த்து இருக்கும் சிவப்பு பள்ளிக்கூடத்தில் நூறு பிள்ளைகள் படிக்கிறார்கள். அவற்றில் பெண் குழந்தைகளும் உண்டு. எப்பொழுதும் அவன் சரியாக ஒன்பது மணிக்குத் தன் மிட்டாய் தட்டோடு பள்ளிக்கூட வாசலில் வந்து நிற்பான். 10 முதல் 11 மணி வரை வியாபாரம் நடக்கும். பின் கொஞ்சம் வெளி வியாபாரத்தையும் பார்த்துக்கொள்வான். வெயில் 108 டிகிரி இருந்தாலும் சரி அவனுடைய மிட்டாய் உருகிவிட்டால் கூட அவனுடைய முயற்சி இளகாது. ஒரு மணி அடிப்பதற்கு 5 நிமிடம் முன் பள்ளிக்கூட வாசலில் ஆஜராகி விடுவார். குழந்தைகளுக்குச் சாப்பாட்டு நேரம், அந்த 1 மணி முதல் 2 மணி வரை அவர் வியாபாரம் நடக்கும். இரண்டரை மணிக்கு அப்புறம் நகர்வலம் செல்வான். கிடைத்தது மட்டும் லாபம் என்று நினைக்காமல் தெருத்தெருவாகவும், சந்து சந்தாகவும் சுற்றுவார். மறுபடியும் நாலரை மணிக்குப் பள்ளி வாசலில் ஆஜராகி விடுவார். பள்ளிக்கூடத்தில் இருந்து வெளிவரும் குழந்தைகள் மிட்டாய்களை வாங்கி வாயில் அடக்கிச் செல்வார்கள்.

ஒரு நாள் முழுவதும் ஒரே பள்ளிக்கூடத்தில் அல்லது ஒவ்வொரு வேலைக்கும் ஒரு பள்ளிக்கூடத்தில் போவதும் உண்டு. எப்படியோ மாலை நேரத்திற்குள் எட்டணா காசு சம்பாதித்து விடுவார். அதில் முக்கால்வாசி கிடைத்துவிடும். அதை எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போவான். ஆனால் குழந்தைகளுக்கு லீவு நாள் வந்தால் மட்டும் அவனுக்கு வியாபாரம் மந்தமாகிவிடும். அன்றைக்கு அலைச்சலும் அதிகமாக இருக்கும். பள்ளிக்கூடத்தில் கோடை விடுமுறை தொடங்கி விட்டது. ஒன்றரை மாதம் குழந்தைகளின் சலசலப்பு சத்தம் இருக்காது. முனுசாமியும் அங்கு செல்ல மாட்டான். பள்ளிக்கூடம் மௌன நிலையில் இருப்பதை அவன் வெறுத்தான். குழந்தைகளுக்கு அந்த விடுமுறை தூக்கத்தைப் போன்று ஓய்வு கொடுத்தது. ஆனால் முனுசாமிக்கு அந்த விடுமுறை மரணத்தைப் போன்று இருந்தது.

முனுசாமி வாழ்க்கையில் ஒரு கண்டம் வரும். அது அந்த விடுமுறை காலமாகும். அவனுக்கு மற்ற நாட்கள் கூட வேகமாக ஓடி விடும். ஆனால் அந்த விடுமுறை நாட்கள் மெல்ல மெல்ல அடிமேல் அடி வைத்து அவனைப் பார்த்துப் பார்த்துப் பயமுறுத்திச் சென்றன. அந்தக் காலங்களில் வெயில் அதிகம், அலைச்சலும் அவனுக்கு அதிகம். மாலை நேரத்தில் வீட்டிற்கு வரும்போது உள்ளம் வதங்கியும் உடல் வதங்கியும் வருவான். உழைப்பு என்றும் வீண் போகாது உழைப்பிற்குத் தகுந்த பலன கட்டாயம் கிடைக்கும்.

**முனுசாமியின் குடும்பம்**

முனுசாமியின் மிட்டாய் வியாபாரத்திற்காக மிட்டாய்களைத் தயாரிப்பதற்கு அவர் மனைவியும் உதவி செய்கிறாள். அவள் நாலு வீடுகளில் வாசல் பெருக்கியும் பாத்திரம் தேய்த்தும் மாதம் நாலு ரூபாய் சம்பாதித்தாள். இரண்டு பேரும் ஏதோ கிடைத்ததை வைத்துக் கஞ்சியைக் குடித்து வாழ்க்கையை நடத்துகிறார்கள். அவர்களுடைய அன்புக்கு அடையாளமாக ஓர் ஆண் குழந்தை பிறந்தது. எப்படியோ இந்த வருடக் கோடை விடுமுறை கழிந்து விட ஒரு வாரம் உள்ளது. எங்கேயாவது கடன் வாங்கிச் சக்கரை, எள்ள, கடலை வாங்கி மற்ற பண்டங்களைச் செய்து வைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறான்.

முனுசாமியின் மனைவி, தான் வேலைச் செய்யும் வீடுகளில் ஒரு வீட்டு அம்மாவிடம் இரண்டு ரூபாய் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தாள். சர்க்கரை முதலிய சாமான்களை வாங்கிப் புது வருட வியாபாரத்திற்குச் சரக்குகளைத் தயார் செய்தனர். அவர்களின் குழந்தைக்கு இரண்டு வயது ஆகிறது. எதைப் பார்த்தாலும் வாயில் எடுத்துப் போடும் பருவம் இது. தன்னுடைய குழந்தைக்கு மிட்டாய் தின்னும் அந்தஸ்து இல்லை என்றும், ஒரு நாள் கொடுத்துப் பழக்கம் பண்ணினால், அது தொந்தரவாகிவிடும் என்றும் முனுசாமி கூறுகிறார். ஆனாலும் குழந்தைக்கு இது தெரியுமா? மீண்டும் எனக்கு ஒரு மிட்டாய் என்று உதைத்து அழுதது. முனுசாமி அந்தக் குழந்தையிடம் கோபத்தைக் காட்டுவான்.

மற்ற குழந்தைகளிடம் இனிமையாகப் பேசி வியாபாரம் செய்யும் அவனுக்குத் தன் குழந்தையிடம் பிரியமாகப் பேசத் தெரியவில்லை. அவனுக்கு அந்தக் குழந்தை அவனுடைய அதிகாரத்திற்கு வேண்டிய குட்டி அடிமை. அப்படி அவன் நினைத்தானோ இல்லையோ அவனுடைய அன்றாட நடவடிக்கை அப்படி ஆகிவிட்டது.

**பள்ளிக்கூடம் திறப்பும் முனுசாமியின் பரபரப்பும்**

பள்ளிக்கூடம் திறக்கும் நாள், முனுசாமி காலையில் சீக்கிரம் எழுந்து புது வருடப் பிறப்பு போல் அவனுக்கு இருந்தது. அந்த மிட்டாய் தட்டிற்கு வர்ணம் பூசி அதில் மிட்டாய்களை எடுத்து வைத்தான். சாமியிடம் வேண்டிக்கொண்டு கொஞ்சம் கஞ்சி குடித்துவிட்டுக் கை கழுவிக் கொண்டிருந்தான். அந்தச் சில நொடியில் குழந்தை தட்டிலிருந்து மிட்டாயை வாயில் போட்டுக் கொண்டான். அதைப் பார்த்த முனுசாமி அவனைத் திட்டி அடித்ததில் கீழே சுருண்டு விழுந்தான். வலியில் கத்தி அழுதான். அவள் தாய் ஓடி வந்து பார்த்துக் குழந்தையை வாரி எடுத்தாள். என் குழந்தையைக் கொன்னுடானே! என்று கத்தி அழுதாள். இவன் வேற எங்கேயோ பிறந்து இருந்தால் கூட நல்லா இருந்திருப்பானே! இந்த மனுஷ மிருகத்திடம் வந்து மாட்டிக்கொண்டானே என்று அழுகிறாள்.

உன்னை அடிக்க எப்படித்தான் இந்தப் பாவிக்கு மனசு வந்ததோ என்று அழுது அவள் உள்ளம் படபடத்தது. ஆனால் முனுசாமி வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறான். அவன் அந்தக் குழந்தையை ஐயோ பாவம் என்று நினைக்கிறான். அந்தக் குழந்தையால் வியாபாரம் ஆகுமா?ஆகாதா? என்று நினைக்கிறான். இப்படி அவன் யோசிக்கிறான். ஒரு சந்து வழியாக நடந்து போய்க் கொண்டிருக்கும் போது, எதிரில் திடீரென்று ஒரு மோட்டார் வேகமாக வந்தது. சட்டென்று அவன் ஒதுங்கி நடந்து போய்க் கொண்டிருக்கும் பொழுதுதான், அங்கே இருந்த பெரிய கல் தடுக்கிக் கீழே விழுந்தான். அவன் தலையிலிருந்த மிட்டாய் தட்டு பக்கத்திலிருந்த சாக்கடையில் விழுந்து முண்டாசு ஒருபுறம் மணி ஒருபுறம் விழுந்தது. கல் அவனைத் தடுத்து விட்டது. அந்தக் கல்லின் மீது உட்கார்ந்து யோசிக்கிறான். உடம்பில் காயம் படவில்லை. ஆனால் உள்ளத்தில் காயம்பட்டது. தன் குழந்தைக்குச் சிறிய துணுக்கு கூடக் கொடுக்காமல் காப்பாற்ற எண்ணி மிட்டாய் அனைத்தும் சாக்கடையில் விழுந்தது. குழந்தையை அடித்து வீழ்த்திவிட்டு வந்தான் கடவுள் அவனையே வீழ்த்திவிட்டான். இதனைக் காட்டுகிறது குறள்.

**பிறர்கின்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா**

**பிற்பகல் தாமே வரும்.** குறள் - 319

**முனுசாமியின் மனிதாபிமானம்**

முனுசாமி மிருகமாக இருந்திருந்தால் அந்தக் குழந்தையைத் திட்டி இருப்பான். ஆனால் குழந்தைக்குரிய அன்பு எங்கோ இடம் தெரியாமல் இருந்தது. தன்னைத் தண்டித்த கல்லின் ஆசனத்தில் உட்கார்ந்து உள்ளத்தைத் திறந்து பார்த்தபோது அவனுக்கு ஞானோதயம் பிறந்தது. புதைந்திருந்த இயல்புகள் மனிதத்தன்மை, பச்சாதாபம் எல்லாத்தையும் நினைத்து, தான் ஒரு பாவி என்று திட்டிக்கொண்டு மனம் வருந்தி, அந்தக் குழந்தை உயிரோடு இருக்கிறதா? இல்லையா? என்பது கூடத் தெரியாமல் வந்துவிட்டோமே என்று கண்களில் நீர் ததும்பியது. கடவுளிடம் வேண்டிக் கொண்டான் குழந்தையைப் பார்க்க வீட்டிற்குச் சென்றான்.

அதுக்குள்ளே வீட்டிற்கு வந்துட்டிங்க வியாபாரம் ஆயிடுத்தா என்று அவன் மனைவி கேட்டாள். மிட்டாய் எல்லாம் கொட்டிப் போச்சு என்று சொன்னான். குழந்தை அழுது அழுது சோர்ந்து அவள் தாயின் மடியில் படுத்துக் கொண்டிருந்தான். இதற்கெல்லாம் காரணம் குழந்தை என்று கூறி விடுவானோ என்ற பயம் அவளுக்கு இருந்தது. இவன் குழந்தையைப் பற்றிக் கேட்க அவளுக்குக் கோபம் வந்தாலும் அடக்கிக் கொண்டு மீண்டும் கேள்வி மேல் கேள்வி வர அவள் கோபம் கொண்டு திட்டுகிறாள்.

ஒரே குழந்தையைக் கொன்று போட்டு விடு. கண்டிப்பா உனக்குச் சாமி கூலி கொடுக்காமல் போகாது என்று துக்கம் தொண்டையை அடைக்கப்

பேசுகிறாள். அவனுக்கும் கண்ணீர் விட்டு அழுது எனக்குச் சாமி கூலி கொடுத்தது என்று கூறி இனிமேல் நான் குழந்தையை அடிக்க மாட்டேன் என்றும் சாமி சத்தியம் செய்கிறான்.

இவற்றிற்கிடையே அந்தக் குழந்தை கண்ணைத் திறந்து பார்க்கிறபோது முனுசாமி ஒரு பையில் அந்தக் குழந்தைக்கு மிட்டாய் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தான். குழந்தையும் சிரித்துக் கொண்டே வாயில் போட்டுக் கொண்டு இருந்தது. தந்தை பாசத்துடன் அந்தக் குழந்தை கன்னத்தில் முத்தமிட்டான். அவனின் தாய் மறு கன்னத்தில் முத்தமிட்டாள். இவ்விருவரின் முத்தமும் அந்தக் குழந்தையின் கன்னத்திற்கு மருந்தாக இருந்தது. குழந்தையும் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தது. அதைக் கண்டு இருவரும் மகிழ்ந்தனர். யாரை வேண்டுமென்றாலும் ஏமாற்றி விடலாம். ஆனால் மனசாட்சியை ஒருபோதும் ஏமாற்ற முடியாது மனதை உறுத்திக்கொண்டே இருக்கும்.

**கதையின் மையக் கருத்து**

மிட்டாய்காரன் என்ற சிறுகதையில் மிட்டாய் விற்று தன் வியாபாரத்தை உயர்த்த வேண்டும் என்று எண்ணி தன் குழந்தையைப் புரிந்துக் கொள்ளாத நிலையைக் கூறுகிறது. முனுசாமியின் ஆர்வமும் உழைப்பும் மிட்டாய் வியாபாரத்தில் எந்த அளவிற்குக் இருந்ததோ, அதே அளவிற்குத் தன் குடும்பத்தின் மீது அக்கறை செலுத்தவில்லை. அதேபோல்

சம்பாதிப்பதற்காகவும் விற்பனையைக் கூட்டுவதற்கும் மற்ற குழந்தைகளிடம் இனிமையாகப் பேசத் தெரிந்தவனுக்குத் தன் குழந்தையிடம் பாசமாகப் பேசத் தெரியவில்லை. அதற்குக் காரணம் என்ன? அவன் வியாபாரத்தில் காட்டும் ஆர்வம். அவன் பணம் மட்டும் தான் வாழ்க்கை என்று நினைத்தானோ அல்லது உழைப்பின் மீது அதிக ஆர்வம் காட்டியது தானோ தெரியவில்லை. குடும்பம் மீதும் தன் குழந்தை மீதும் அக்கறை செலுத்தவில்லை.

கடவுளே அவனுடைய மனதிற்கு ஒரு தீர்வு கொடுத்தது. அவனுடைய மிட்டாய் கடைசியில் சாக்கடையில் விழுந்தது. தன் குழந்தைக்கு மிட்டாய் கொடுக்காமல், மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம், பணம் சம்பாதிக்கக்கூடிய திறனும் இருந்த காரணத்தினால், அதனைக் கடவுளே ஒரு வண்டியின் மூலம் முனுசாமியின் தலையில் இடி விழுந்தது போலச் செய்தான்.

அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது, அவன் செய்தது தவறு என்றும், ஒவ்வொரு நேரத்திலும் தன்னைத்தானே குழப்பிக்கொண்டு குழப்பவாதியாக இருந்த அவனுக்குச் சாக்கடையில் விழுந்த மிட்டாய் தான் பாடம் கற்பித்தது. மனசாட்சி ஒரு தடவை உறுத்தினால், அது செய்யப்போகும் குற்றத்தின் எச்சரிக்கை மீண்டும் மீண்டும் உறுத்தினால் அது செய்த குற்றத்திற்கான தண்டனை.

**முடிவுரை**

கடவுள் கொடுத்த நிகழ்வினால் அவன் மனம் மாறியது. பின் அவன் மனம் நிரந்தரமான ஒரு முடிவை எடுத்தது. ஒரு மனிதனுக்குத் தொழில் எவ்வளவு முக்கியமோ அதைவிட அவனின் குழந்தையும் குடும்பமும் முக்கியம்.

வியாபாரத்திற்காக மற்ற குழந்தைகளிடம் இனிமையாகப் பேசத் தெரிந்த முனுசாமிக்கு, நிச்சயம் தன் குழந்தையின் மனநிலையும் புரிந்திருக்கும். இருந்தும் தன் குழந்தைக்குப் பண்டங்களைக் கொடுக்காதது, குழந்தையை வெறுத்து அல்ல. தன் சூழலை உணர்ந்து, அவனது கோபமும் வேகமும் குழந்தையைத் தண்டித்தது. குழந்தைக்குப் புரியவைக்கும் முறையில் சற்றே தவறிவிட்டான். என்றைக்குமே குழந்தையும் வியாபாரமும் ஒன்றாகாது என்பதைக் கடவுள் முனுசாமிக்கு உணர்த்தினார். குழந்தைத் தன் தந்தையிடம் எதிர்பார்த்த அன்பும் கிடைத்தது.

ஆய்வுக் கட்டுரை – மூன்று

## பிரபஞ்சனின் மரி என்கிற ஆட்டுக்குட்டி ஒழுக்க நெறிமுறைகள் - ஓர் ஆய்வு

**க. மகாலட்சுமி, இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

**முன்னுரை**

ஆசிரியப் பணியே அறப்பணி. அதிலே உன்னை அர்ப்பணி. என்னைக் கேட்டால், ஆசிரியர் பணியை விட மிகச்சிறந்த பணி வேறு இல்லை எனக் கூறுவேன். ஏனெனில் ஓர் ஆசிரியரின் பேச்சைக் கேட்டு, ஒரு மாணவி தன்னை எப்படி மாற்றிக் கொள்கிறாள். இக்கதையின் ஒரு மாணவியின் வாழ்வை ஒழுக்க நெறிப்படுத்தும் ஆசிரியரைப் பற்றி, பிரபஞ்சன் அழகாகக் கூறுகிறார்.

**குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை**
**கலை பயில்தெளிவு கட்டுரை வன்மை**
**நிலம் மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்**
**உலகில் அறிவோடு உயர்குணம் இனையவும்**
**அமைபவன் நூலுரை யாசிரி யன்னே** **(நன்னூல்-26)**

ஆசிரியரின் சிறப்பை மிக அழகாக நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர் கூறுகின்றார். ஆசிரியர்களுக்கு ஆயுள் குறையும் என்று அறிவியல் கூறுகிறது. ஆனால் நான் இதை மறுக்கிறேன். ஏனெனில் ஆசிரியரால் தன் மாணவர்களைச்

சாதனையாளர்களாக மாற்ற முடிகின்றது. அதனைக் கண்டு அவர் மகிழும் பொழுது ஆயுள் கூடுகின்றது என்றே நான் நினைக்கின்றேன்.

**முதல்வரும் தமிழாசிரியரும்**

அக்காலத்தில் மாணவர்கள் ஆசிரியரைக் கடவுளாக நினைத்து மரியாதையுடன் நடத்தினர். ஆனால் இக்கதையில் வரும் மரி என்னும் பெண் ஆசிரியரை மதிக்காமல் எவ்வாறு இருக்கிறாள் என்பதைப் பார்க்கலாம்.

எந்தக் கல்வி தேவை? ஒரு மூட்டை நூல்களை வாசித்தலா? அன்று. அடக்கம், ஒழுங்கு, அறம், நீதி இவற்றின் முன்மாதிரிகளே தேவை. கல்வி கற்றுத்தரும் ஆசிரியர்களையும் பெரியவர்களையும் மதிக்க வேண்டும். மரியின் ஒழுக்கமின்மையால் முதல்வர் தமிழாசிரியரிடம் அற்புதமரிக்கு டீசி கொடுக்கலாமா எனக் கேட்டார். ஆசிரியர் யார் அந்த அற்புதமரி எனக் கேட்டார். அதற்குப் பள்ளி முதல்வர் ஆமா நம்ம பள்ளியில் 98 அற்புதமரியா இருக்கா? அதான் அந்தப் பத்தாம் வகுப்புல இருக்கால அந்த அற்புதமரிய கேட்கிறேன். நீங்கதான அவள் வகுப்பு ஆசிரியர் அதான் கேட்டேன். அவள் ஒழுங்காகப் பள்ளிக்கு வரவே மாட்டிங்குறா. டைட்டா ஒரு பட்டன் போட்டுட்டு சுவிங்கத்த மென்னுக்கிட்டு ஒரு ஆட்டுக் குட்டி போலச் சைக்கிள்ல வரா. பள்ளிக்கு இப்படியா வருவாங்க. இப்படி ஆடை போட்டால் யார்தான் பார்க்காம இருப்பாங்கச் சொல்லுங்க.

“அடக்கம் ஓர் அணிகலன் மட்டுமன்று அது ஒழுக்கத்தின் பாதுகாப்பு ஆகும்.” (பொன்மொழி) என எடிசன் என்பவர் அணிகலன் பற்றியும் ஒழுக்கம் பற்றியும் தன் பொன்மொழியில் சிறப்பாகக் கூறியிருக்கின்றார்.

போன மாதம் கூட 12 நாள் தான் பள்ளிக்கு வந்தாள். ஒரு நாள் பள்ளிவாசலில் நான்கு கழுதையுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்தாள். அப்போது அந்தப் பக்கமா போன நம்ப வரலாற்று ஆசிரியர் சென்று இப்படி எல்லாம் பள்ளிக்கூடத்தில் பண்ணக் கூடாது என்றார். அதற்கு அவள் நான் என்ன வேணாலும் பண்ணுவேன் நீங்க எதுக்கு என்னைக் கேள்வி கேட்குறீங்க என்று கேட்கிறாள்.

**தமிழ் ஆசிரியரும் அவர் மனைவியும் மரியைக் காணச் செல்லுதல்**

இவள் ஏன் இப்படி இருக்கிறாள். அவள் வீட்டில் யாரும் எதுவும் கேட்க மாட்டாங்களா? அவளுக்கு ஏதாவது பிரச்சினையா? என யோசித்துத் தன் மனைவியிடம் மரியைப் பற்றிக் கூறி அவள் வீட்டிற்குச் சென்று அவளைப் பார்க்கலாம் என்று கூறி இருவரும் அவளைக் காணச்சென்றனர்.

மரி மரி என அழைத்தார் ஆசிரியர். மரி தூங்கி எழுந்து சென்றாள். நீங்க... என்னைப் பாக்க வந்து இருக்கீங்க! வாங்கச் சார் உள்ள என்று அழைத்துச் சென்றாள். அங்குள்ள பொருட்களைப் பார்த்து இவள வசதியாக இருப்பாள் என இருவரும் நினைத்தனர். இருவரையும் நாற்காலியில் அமர வைத்தாள். நல்ல

பணம், பெரிய வீடு, வீட்டின் முன் கார்கள் என அனைத்தும் இருந்தும் மரி மன நிம்மதியில் இல்லை.

**மரி தன் இயல்பைப் புரிய வைத்தல்**

தாய் தந்தை தன் கடமையில் இருந்து தவறிவிட்டனர். அவர்களின் பிள்ளைகளுக்கு நன்மை தீமை கற்றுத் தர எவரும் இல்லாததால் அவர்கள் ஒழுக்கம் தவறி நடக்கின்றனர். நான் சிறுவயதில் இருக்கும் போதே என் அப்பா எங்களை விட்டுச் சென்றுவிட்டார். அம்மாவும் தனக்குப் பிடித்தவருடன் சென்றுவிட்டார். எனக்கு அவரைப் பிடிக்காது அவருக்கு என்னைப் பிடிக்காது என்றான். இதைக் கேட்டு இருவரும் வருந்தினர். அப்போ சாப்பாடுக்கு என்ன பண்ணுவ, அதுவா ஹோட்டல்ல சாப்பிடுவேன். அம்மா எப்பயாவது வருவாங்க. அவங்க சமச்சி தருவாங்க. அதுவும் சுமாராகத்தான் இருக்கும் ஏன் ஏனென்றால் அவர் என்னை மகளாக எண்ண மாட்டார். நானும் அவரை அம்மாவாக நினைக்க மாட்டேன் என்றாள்.

இப்பெண் ஒழுக்கம் இல்லாதவளாக மாறியதற்குக் காரணம் இவள் பெற்றோர்களே. தான் பெற்ற பிள்ளையைப் பற்றி எண்ணாமல் தங்களது வீருப்பத்திற்காக அவர்களது வாழ்க்கை மாற்றிக்காண்டார்கள். மரி தாய் தந்தையின் அன்பு கிடைக்காமல் மனம் நொந்து சிறு வயதிலேயே தான் அனுபவிக்கக் கூடாத சூழல்களைக் கடந்து வந்ததாள். அவளது மனம்

கல்லானது. எல்லாவற்றையும் வெறுத்தால் அன்பிற்கு ஏங்கிய உள்ளம் வழி தப்பியது.

**மரியை மாற்றும் தமிழாசிரியர் அன்பு**

மரிக்கு நன்மை எது தீமை எது எனவும் அவளின் மனநிலை மாற வேண்டும் என்பதற்காக மரியைப் பீச்சிற்கு அழைத்தனர். மரி நானுமா வரணும் சார்? ஆமாம் நீ தான் செல்லலாம் என்றார். மரி மிக ஆர்வத்துடன் கிளம்பிச் சென்றாள். ஆசிரியரிடம் உரிமையுடன் எனக்குப் பசிக்குது. ஏதாவது வாங்கித் தாங்க என்றால் ஆசிரியரும் அவர் மனைவியும் அவளுக்கு என்ன பிடிக்குமோ அதை எல்லாம் வாங்கித் தந்தனர்.

மாணவர்களுக்கு ஏதேனும் சிக்கல் இருந்தால் அதிலிருந்து எப்படித் தப்பிக்கலாம் என ஆசிரியர் வழிக் கூறி தன் மாணவர்களைப் பாதுகாப்பார்கள். ஆசிரியரின் மனைவி மரியிடம் இரவு எங்களுடன் தான் நீ சாப்பிட வேண்டும் என்றார். இரவு உணவு சாம்பாரும் நெத்திலி மீன் வறுவலும் மரி அதை உண்டு அக்கா மிகவும் சுவையாக உள்ளது எனக் கூறி மகிழ்ச்சியுடன் சாப்பிட்டாள். தினமும் ஆசிரியர் வீட்டுக்கு வந்து போவாள் உணவும் அவர் வீட்டில்தான்.

**கல்வியின் அருமையை உணர்தல்**

மரியை நல்வழிபடுத்த அவளின் ஆசிரியரும் அவர் மனைவியும் அவளுக்கு உறுதுணையாக இருந்தார்கள். மரி தன் ஆசிரியரைப் பார்த்துச் சார் நான் பள்ளிக்குச் சரியாக வருவதில்லை. அதைப் பற்றி நீங்க ஏன் சார் எதுவும் கேட்கல என மரி கேட்டாள். நீயாகக் கேட்கும் வரை காத்திருந்தேன் என்றார். என்னை அறைஞ்சு நீ ஏன் ஸ்கூலுக்கு வரலனு கேட்கணும் சார். அப்படிக் கேட்க யாரும் இல்லேங்கிறதுனாலதான் நான் இப்படி இருக்கேன். என்மேல யாரும் இப்படி அன்பு செலுத்தியது இல்லை சார். அன்பு செலுத்தறவுங்களுக்குத்தானே அதட்டிக் கேட்கவும் அதிகாரம் இருக்கு? என்கிறாள். அன்பான வழிநடத்துதல் ஒழுக்கம் பற்றி பாடம் கற்பிக்காமலே அவளை மாற்றியது.

**முடிவுரை**

இன்பத்தை விடத் துன்பத்தை நேசித்துத் தைரியமாக இருந்து பார் துன்பமே இன்பமாக மாறும் என ஆசிரியர் மரிக்கு அறிவுரை கூறினார். ஆசிரியர் கூறியதைக் கேட்டுப் பள்ளிக்கு ஒழுக்கமாகச் சென்று நன்றாகப் படித்தாள்.

இதில் ஆசிரியர் மாணவர் இருவரின் வாழ்வையும் புலப்படுத்துகிறார். மாணவி ஒழுக்கம் இல்லாமல் இருக்கக் காரணம் அவளது குடும்ப சூழ்நிலையே.

ஒரு மாணவன் ஒழுங்கற்றவனாக இருக்கும் போது அவனை ஒதுக்காமல் அவனது மாற்றத்திற்கு காரணம் என்ன என்பதை ஆசிரியர் ஆராய வேண்டும்.

மாணவர்களின் உளவியலை அறிந்து ஆசிரியர்கள் செயல்பட வேண்டும். ஆசிரியரின் நடக்கயில் அரவணைப்பில் மாணவர்களின் நடத்தை நல்லொழுக்கமுடையதாக மாறும் என்பதையும் பிரபஞ்சன் ஆழமாக உணர்த்துகிறார்.

ஆய்வுக் கட்டுரை - நான்கு

## சமுதாயப் பார்வையில் ராஜம் கிருஷ்ணனின் வேலி

**க. ஆனந்தி, முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு**

**முன்னுரை**

பெண்களை மதிக்கும் நாடுகளையும் மக்களையும் நாம் பார்த்திருக்கின்றோம். அதுபோன்று பெண்களை அடி மட்டமாக நினைத்த காலங்கள் போய் உயர்ந்த இடங்களில் நிலைத்து நிற்கக்கூடிய ஓர் ஆற்றல்மிக்க பெண்களாக இந்தச் சமுதாயத்தில் வலம் வருகின்றனர். இன்றைய காலங்களில் பெண்கள் பெண்களின் உரிமைகள், போராட்டங்கள், முன்னேற்றங்கள் பற்றிய இலக்கியங்கள் படைக்கப்பட்டன. பெண்கள் நாட்டின் கண்கள் என்பார்கள். ஆனால் பல தருணங்களில் பெருமையாகப் பேசினாலும் இன்னும் முழுச் சுதந்திரம் பெறாமல் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இதன் அடிப்படையில் தான் வேலி சிறுகதை அமைந்துள்ளது. சுதந்திரம் இல்லாத சமூகச் சூழலில் ஒரு பெண் குடும்பத்திலும், சமூகத்திலும் எதிர்கொள்ளும் இடர்களை எவ்வாறு சமாளிக்கிறாள் என்பதை வேலி என்ற சிறுகதை நமக்குக் கூறும் செய்தியாகும்.

**கதையாசிரியர் ராஜம் கிருஷ்ணன்**

சிறுகதை என்பது சுருக்கமான, கதை கூறும் உரைநடை இலக்கியமாகும். பெரும்பாலும் ஒரு மையக் கருவினை அல்லது நிகழ்ச்சியின் அனுபவத்தை

விவரிக்கும் இலக்கிய வகையாகும். சிறுகதை பொதுவாகக் குறும் புதினம் மற்றும் நாவலை விடச் சுருக்கமானதாகும். சிறுகதையில் ஒரு மனிதர் அல்லது ஓர் உணர்வு, ஒரு நிகழ்ச்சி அல்லது ஒரு சிக்கல் பற்றியதாகத் தான் சுருங்கக் கூறப்பட்டு இருத்தல் வேண்டும். ஒரு சிறுகதைக்குப் பின்னே உள்ள படைப்பாளரின் கலை ஆற்றல், கற்பனைத் திறன், சொல்லாட்சி, அவர் மறைமுகமாகக் கூறும் செய்தி இவையனைத்தும் இலக்கண வரம்புகளை விட முக்கியமானவையாகும்.

சிந்தனையாளர், எழுத்தாளர் சாகித்ய அகாடமி விருதுக்கு உரிமையான ராஜம் கிருஷ்ணன், 1925ஆம் ஆண்டு திருச்சியில் உள்ள முசிறியில் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர். அந்தக் கால முறைப்படி மிக இளம் வயதிலேயே இவருக்குத் திருமணம் செய்துவைக்கப்பட்டது. அதனால் பள்ளிப்படிப்பும் பாதியிலேயே நிறுத்தப்பட்டது. கணவர் கிருஷ்ணன் மின் பொறியாளர், இருவரும் சென்னை தாம்பரத்தில் வசித்தனர். இவரின் வாசிப்பு ஆர்வம் அறிந்து அவர் கணவர் கொடுத்த ஊக்கத்தால் நிறைய நூல்கள் வாசிக்கும் ஆர்வம் ஏற்பட்டது 20 வயதில் இருந்தே எழுதவும் ஆரம்பித்தார்.

**வேலி சிறுகதையின் அமைப்பு**

ஒரு பெண்ணின் மனக்குறையை யாரேனும் கேட்க மாட்டார்களா என்று ஏங்கும் மனமும், சுற்றத்தாரே அலட்சியப் படுத்துவது, தன்னை நிலைநிறுத்திக்கொள்ளப் போராடுவதே வாடிக்கையான பெண், பலவற்றை

இழந்தும், விட்டுக் கொடுத்தும் தன் வாழ்க்கையில் மகிழ்ச்சியின் உணர்விற்கு இடமில்லாத வாழ்க்கை, இச்சமூகம் குணங்களை மறைக்கும் போலி முகங்களைக் கொண்டது என்பதையும், ஒரு பெண் இச்சமூகத்தில் பிறப்பு முதல் இறப்புவரை எல்லாவற்றிற்கும் போராடுகிறாள் என்பதையும், பெண்ணுக்குக் கணவனே பாதுகாப்பின் வேலியாக இருப்பினும், அதுவே நம்மை வலியால் துளைக்கும் முள்ளாக மாறிப்போனதையும், வலியின் வேலியை இச்சமூகம் தகர்க்குமா என்ற ஏக்கமுமே இக்கதை.

**ராஜம் கிருஷ்ணனின் சமுதாயப் பார்வையில் - வேலி**

ஒரு பெண் தன் உரிமை என்று ஒரு காரியத்தைச் செய்யினும் சமுதாயம் அதைத் தவறு என்ற பார்வையிலேயே பார்க்கிறது. காதலில் இரு மணம் ஒன்றிப் போனாலும் இரு சமூகம் தன்னை இணைப்பு வளையத்திற்குள் முற்படுத்திக்கொள்வதில்லை. இச்சமூகம் பல ஏற்றத்தாழ்வுகளைப் பின்னல்களாகக் கொண்டு அமையப்பெற்றுள்ளது. இதில் இருக்கும் சிக்கல்களைக் களைவது என்பது "பாலைவன மண்ணில் நீரைத் தேடுவது போன்றது. இரு சமூகத்தைச் சார்ந்தோர் திருமணம் செய்து கொண்டாலும் இல்லறத்தை நல்லறமாக மாற்றிக்கொள்ள முற்படின், சுற்றத்தாரும் நம்மைச் சார்ந்தோரும் ஆதரவு தருவதில்லை. சமுதாயமும் அதனை வரவேற்பதில்லை.

**மாறுபடாத பெண்மையின் இயல்புகள்**

உலகப் படைப்புகளில் உயர்ந்த படைப்புப் பெண்ணே. அனைத்து உயிர்களையும் உண்டாக்குவதும், காப்பாற்றுவதும், உயிர்ப்பிப்பதும் பெண்ணே. “அன்பு, ஆதரவு, பகிர்தல் இது மூன்றுக்கும் பொருத்தமாய் மனித குலத்தில் வாழ்பவள் பெண். அவளே ஆக்கலும் காத்தலுக்கான ஆதி தொன்மமாய் வடிவில் உள்ளாள்.

**பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா!**

**பெண்மை வெல்கவென்று கூத்திடுவோமடா!**

என்றும்

**உச்சிதனை முகந்தால் - கருவம்**

**ஓங்கி வளருதடி!**

**மெச்சி உனை ஊரார் - புகழ்ந்தால்**

**மேனி சிலிர்க்குதடீ**

என்றும் மகாகவி பெண்களைப் பற்றிப் பெருமையாகப் பாடுகின்றார்.

இன்றைய பெண்களின் நிலை என்ன? இன்றைய பெண்கள், ஆண்களுக்கு இணையான வேலைவாய்ப்பு, கல்வி, பொருளாதாரச் சுதந்திரம் போன்றவற்றைப் பெற்றிருக்கிறார்கள். ஆனாலும் மனதளவிலும், உடல் அளவிலும் பலகீனமாகவே பார்ப்பதை இச்சமூகம் மாற்றிக்கொள்ளவே இல்லை என்பதே உண்மை. இக்கதையின் நாயகியின் நிலையும் இத்தன்மை வாய்ந்ததாகும்.

**கதை மாந்தர்கள்**

மாலதி - கதையின் நாயகி, கோமதி அம்மாள் - மாமியார், செண்பகம் – நாத்தனார், மங்களம்மாள் - பக்கத்து வீட்டுப் பெண்மணி, கணவர் - மாலதியின் கணவன், ருக்மணி - மாலதியின் அக்கா, மாமா - ருக்மணியின் கணவர், குட்டிப்பையன் - ருக்மணியின் மகன், அம்மா - மாலதியின் அம்மா.

**மாலதி ஒரு சுமைதாங்கி**

பெண் சமூகத்திற்கே போராளியின் வலிமையை மாலதியின் கதா பாத்திரத்தின் மூலம் வெளிப்படுத்துகின்றார் ஆசிரியர். புகுந்த வீட்டின் கௌரவத்தையும் பிறந்தகுடியின் கௌரவத்தையும் சமநிலைப்படுத்தும் தராசு தான் மாலதி. சகிப்புத் தன்மையில் வலிமை மிகுந்தவள் பெண் - காந்தியடிகளின் கூற்று மாலதிக்குச் செவ்வனவே பொருந்தும்.

**சீர்திருத்தத் திருமணத்திற்கு முரணான - கோமதியம்மாள்**

மாலதியின் மாமியாரான கோமதியம்மாள் மனிதர்களென்றால் சாதிப் பாகுபாடு உண்டு. பணத்திற்குச் சாதியில்லை என்ற தீராத வியாக்கானம் பேசுபவர். சுருங்கச் சொல்லின் மனதிற்குச் சாதி வேலி, பணத்திற்குப் பொதுவுடைமை கொள்கை. “சாதிக்குத் தக்க புத்தி, குலத்துக்குத் தக்க ஆசாரம்” என்ற பழமொழிக்கு ஏற்றார் போல நடந்துகொள்பவள் கோமதியம்மாள்.

**கானல் நீராகக் கணவர்**

மாலதியைக் கரம் பிடித்தும் தன் கடமை முடிந்ததென்று குடும்பப் பாரத்தைக் குறைக்க, உள்ளூரில் வழியில்லையென்று, அந்நிய நாட்டிற்கு அடிமைப்பணி செய்து கொண்டிருப்பவர். மனைவிக்குச் சுமை தந்து, அவளின் மனக்குறையைக் கேட்க நேரமில்லாத கணவனான காதலன்.

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை** குறள் - 41

மனைவியோடு வாழ்பவன்தான் பிள்ளைகள், பெற்றோர், உறவினர் என்னும் மூவர்க்கும் நல்ல வழியில் உதவுபவன். ஆனால் மாலதிக்குக் கணவனின் பிரிவே, பல போராட்டங்களுக்குக் காரணமாக அமைந்தது.

**நஞ்சாகிய பிஞ்சு - செண்பகம்**

தன்வீட்டின் புதுவரவைத் தொடவோ பாசம் காட்டவோ சாயம் பூசிய ஒரு மனுஷியாகப் பார்க்கவோ கூட மறுக்கப்பட்ட வீட்டிற்குள்ளே ஒரு நஞ்சுச் செடி தான் செண்பகம். இளையவளாக இருப்பினும் சகுனியிடம் பாடம் கற்றவள் சாதி என்ற செண்பக விஷம் இளைய தலைமுறையையும் ஆட்கொண்டுள்ளது என்பது காலம் மாறியும் மாறாத மாற்றம்.

**கதைச் சுருக்கம்**

இன்றைக்கேனும் கட்டாயம் கேட்பார்கள் என்ற சபலத்துடன் வீட்டுப் படியேறினாள் மாலதி. கண் சோர, நடை துவள மாடிப்படி ஏறுகையில் விழுந்துவிடாமலிருக்கும் பொருட்டு சுவரைப் பற்றிக் கொண்டு நின்றாள்.

அப்பொழுது மங்களத்தம்மாளும், அவள் கணவனைப் பெற்றவளும் கூடத்தில் பேசிக் கொண்டிருப்பது கேட்டது. மாலதிக்கு நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. பக்கத்துவீட்டு மங்களத்தம்மாள் நெருப்புக்குச்சியைக் கிழித்துத் தீப்பற்ற வைத்தாள். அந்தத் தீ பற்றி எரிந்ததை அவர்கள் பேச்சின் மூலம் மாலதியால் அறிய முடிந்தது. மாலதி, கோமதி அம்மாளின் மகனைக் காதல் திருமணம் செய்து கொண்டவள். திருமணத்திற்குப் பின் அவள் கணவன் ஒரு பயிற்சியின் பொருட்டு வெளிநாடு சென்றிருந்தான். மாலதி மட்டும் மாமியார் வீட்டில் ஒதுக்கப்பட்ட ஒரு தனித்த அறையில் இருந்தாள். அவள் கருவுற்றிருந்தாள்.

சீமைகடந்து அவன் போறான்னு தெரிந்திருந்தால் இவளை நான் வீட்டுக்குக் கொண்டான்னு சொல்லியிருக்க மாட்டேன், அதுவும் அவள் குலம் தெரிந்த பிறகு என் மனது குறுகுறுத்து உருத்துது. ஏதோ உத்தியோகம் சாக்கிலே அவள் வெளியே போகட்டும் வரட்டும்னு ஏன் வச்சிருக்கேன்? வீட்டுக்குள்ளே அவளை வச்சுக்கிட்டு உள்ளே தொட்டு ஒத்தாசை செய்யச் சொல்ல முடியுமா என்று கோமதி பேசிக்கொண்டே போனாள். அதற்கு மங்களத்தம்மாளும் “குலமில்ல, சாதியில்லேன்னு சொன்னாலும் அவங்க தொட்டு நீங்க எடுத்துக்க முடியுமான்னு?” தீக்குச்சியை உரசிப் போட்டாள். “இவன்தான் ஏடாகூடமாகக் கொண்டு வந்திட்டான்னா. இருக்கிறவங்களுக்கு நல்லவிதமா கல்யாணம் ஆக வேண்டாமா? இவ வீட்டுக்கு வந்த பிறகு இந்திரா வீட்டிலிருந்து யாரும்

வருவதில்லை. நான் என்ன பண்ணுவேன்? வேலிதாண்ட முடியல. முள்ளிலே சிக்கிக்கிட்டாற் போலிருக்கு” என்று கோமதி புலம்பினாள்.

அதற்கு மங்களத்தம்மாள், “அது எப்படித் தாண்ட முடியும்? எதோ நல்லா உடுத்தி, சிரித்துப் பேசி, வேலைக்குப் போனாலும் கூட மண்ணு மண்ணுதானே? மண்ணிலிருந்து பூவையும், கிழங்கையும் எடுத்துக் கொண்டாலும் மண்ணைப் பூசிக்கவா முடியும்?" என்றாள். அதோடு "மகன் வர ஒரு வருஷம் ஆகும். பேறுகாலம்னா என்ன செய்வீங்க” என்று விசாரித்தாள் அதற்கு கோமதி ஆசுபத்திரி இருக்கிறது, பெத்த பின்னே அவங்க அம்மா அல்லது அக்காவுக்குச் சொல்லி அனுப்பினா வந்து பாத்திட்டுப் போறாங்க. இவளுக்காக அவர்களுடன் நான் என்ன சம்பந்தி உறவா கொண்டாட முடியும் என்று பெருமூச்சு விட்டாள். கடைக்குட்டி செண்பகம், அண்ணி நிற்பதைப் பார்த்து அம்மாவிடம் அறிவிக்க அவர்கள் பேச்சை அத்தோடு முடித்துக் கொண்டனர். அந்தப் பத்து வயதுச் செண்பகத்துக்குக் கூடத் தெரியும் என்னதான் அண்ணி அழகாகவும், மற்ற வீட்டுப்பெண்கள் போல இருந்தாலும், அவள் தங்களுக்குச் சமமானவள் அல்ல என்பது.

மாலதி எண்ணிப் பார்க்கிறாள். காதலின் பாதை கரடு முரடாவதை கல்யாணம் ஆகும் வரைதான் நாவலிலும், சினிமாவிலும் அந்தப் பாதையை நீட்டிக் காண்பிப்பார்கள். உண்மையிலேயே அந்தப்பாதை கல்யாணத்தில் தொடங்கித்தான் நீள்கிறது என்பது பலபேருக்குத் தெரிவதில்லை என்று

எண்ணுகிறாள். அவள் எடுத்ததற்கெல்லாம் அழும் பிறவி அல்ல. இருந்தாலும் இதையெல்லாம் கேட்டுவிட்டு அவளுக்கு அழவேண்டும் என்று தோன்றினாலும் கீழே வந்து காபி குடித்துவிட்டுப் போ என்ற மாமியின் குரல் அவளுக்குக் கேட்டும் தலைசுற்றியதால் எழ முடியாமல் பழைய காதல் நினைவுகளை, பிரச்சினையின் ஆரம்பத்தை எண்ணிப் பார்த்தாள்.

ஏன் படுத்திட்டே மாலதி? உடம்புக்கு என்ன? மயக்கமா என்ன? என்றாள் மாமி செண்பகத்தை அழைத்து அண்ணியைத் தொட்டுப்பார் என்றாள். களைப்பாயிருக்கு ஒன்றுமில்லை என்று மாலதி பதில் கூறினாள். லீவு வேணும்னா எடுத்துக்கோ என்று மாமி சொல்லிவிட்டுப் பிறகு, “பிள்ளைகள் ஸ்கூலுக்கும், காலேஜுக்கும் சென்றுவிடுவார்கள். உனக்குப் பொழுது போகாது. மேலும் பேறுகாலத்திற்குப் பிறகுதான் லீவு தேவைப்படும். இப்பப் போட வேண்டாம்” என்ற பாணியில் மாமி கீழே சென்றுவிட்டாள்.

மாலதி கீழே இறங்கி வருவதற்குள் வெளியறை மேசை மீது காபி. பலகாரம் கொண்டுவந்து வைத்துவிட்டாள். குடும்பத்தில் ஒருத்தியாக உலகுக்கு முன்னே ஏற்றாலும், உள்ளத்துக்கு ஏற்கவில்லை வீட்டிற்குள் தாராளமாக வலம் வரச் சுதந்திரம் இல்லை என்று எண்ணிக் கலங்குகிறாள். வாய் திறக்காமல், மாமி செயலில் காட்டும் சாதுர்யம் அவளுக்கு வியப்பினைத் தந்தது.

மாலு? என்ற குரல் அக்காவும், மாமாவும் வந்திருந்ததை அறிவித்தன. சுட்டிப்பையனை மாலு கொஞ்சினாள். அவர்களின் வருகையை, செண்பகம்

கோமதியிடம் தெரிவிக்க, சற்றைக்கெல்லாம் மூச்சிறைக்கப் படியேறி வந்தாள். அவள் அக்காளின் கருப்பு நிறமும். அவளுடைய உடையும் மில்லில் வேலைசெய்யும் அவள் மாமனின் தோற்றமும் அவர்களைச் சமமாக மதிக்க கோமதிக்கு மனம் வரவில்லை. வெறுப்பை விழுங்கிவிட்டு உபசரித்தாள். அவள் அக்கா ருக்குவும், அம்மாவுக்கு உடம்பு சரியில்லாததால் அவர்கள் வரவில்லை. பூ முடிப்பு, வளைகாப்புன்னு நீங்க செய்யறது உண்டான்னு அம்மா கேட்டிட்டு வரச் சொன்னாங்க என்றாள். நாங்கள் பணம் தந்து விடுகிறோம். நீங்கள் ஒரு நாளைக் குறித்துச் செய்யுங்கள் என்றாள்.

இந்தச் சம்பிரதாயமெல்லாம் எதுக்கு அக்கா? என்றாள். இதைக் கேட்ட கோமதி, வழக்கத்தை ஏன் குறைக்கணும், பிறக்கும் குழந்தை நன்றாக இருக்க வேண்டாமா? என்று கண்டிக்கும் தோரணையில் ருக்மணி கொடுத்த பணத்தை வாங்கி இடுப்பில் செருகிக் கொண்டாள். ருக்மணி அவர்கள் கொடுத்த காபியைக் குடித்துவிட்டு டம்ளரைக் கழுவி வைக்க எழுந்தாள். "இருக்கட்டும் அக்கா, நீ கழுவ வேண்டாம்" என்று பிடுங்கிக் கீழே வைத்தாள். அத்துடன் அவர்கள் பெரிய கும்பிடு போட்டுவிட்டு விடைபெற்றுச் சென்றனர். மாலதிக்குத் தலையைச் சுற்றி வயிற்றைப் புரட்ட மீண்டும் படுக்கையில் விழுந்தாள். மீண்டும் கோமதி அவளை நலம் விசாரித்துவிட்டு, சீரக ரசமும், சோறும் கலக்கிக் கொடுத்து அனுப்புகிறேன் குடிச்சிட்டுப் படுத்துக்கோ என்று கூறிவிட்டு. அஞ்சு

தேதியாச்சே ஆபீசில் இன்னும் சம்பளம் போடலையா? என்றாள். போட்டுட்டாங்க. சம்பளம் பெட்டியில் இருக்கு என்றாள் மாலதி.

கோமதி அதற்கு, உன்னைக் கேட்க வேண்டாம்னுதான் நெனச்சேன். நாளைக்குச் சனிக்கிழமை. ஒரு பொழுது மோருக்குக் கூடப் பால் இல்லை. எங்கே வச்சிருக்க சொல்லு? என்றாள் மாலதி பெட்டியைத் திறந்து சேலைக்கடியில் இருந்த பர்ஸை எடுத்துக்கொடுத்தாள். எந்திரிக்க வேண்டாம். ரசம் சோறு குடிச்சிடு, வாந்தி வந்தாலும் குத்தமில்லை என்றபடி சென்றாள். மகளை அழைத்து அவர்கள் காபி டம்ளரைக் கழுவாம வச்சிட்டுப் போயிட்டாங்க எடுத்துப்போய்க் கழுவு என்றாள்.

மாலதி முழுசாய் ஒரு சம்பளம் கூட அவள் அம்மாவிடம் கொடுத்ததில்லை. படிப்புக்கும் வேலைக்கும் தகுந்த வேஷமிடவே அது அவளுக்குச் சரியாக இருந்தது. வேஷத்துக்கும் தகுந்த பலன் கிடைத்துவிட்டது. ஒரு சம்பளம் கூட இந்த வீட்டில் அவளுக்குத் தங்கவில்லை. துயரத்திற்குப் பதிலாக மாலதிக்குச் சிரிப்பு வந்தது. “வேலியும் இல்லை, முள்ளும் இல்லை, பணத்துக்கு மட்டும் ஒன்றுமே இல்லை” என்பதோடு கதை முடிவடைகிறது. வேலியைத் தகர்த்தாளா மாலதி?

காதலித்துக் கரம்பிடித்து முதல், கணவனின் பிரிவின் வலியை மனதில் தாங்கி, தன் வம்சத்தின் வாரிசையும் சுமந்து, கணவனின் குடும்பக் கடமையையும் ஏற்று, சமுதாயத்திலும் குடும்பத்திலும் கடமை தவறாதவள் என்ற

அரிதாரத்தைப் பூசிக் கொண்டு, இளைப்பாரத் தோளுக்கு ஏங்கும் பெண்ணாய், மனமுவந்து ஏற்காத உறவுகளுக்கு மத்தியில் வாழும், போராட்டமே வாழ்க்கையாகிப் போன போராளி.

ஆனால் கதையின் நாயகி மனவலிமை கொண்டவள். தன்னை வார்த்தைகளால் ருசிக்க எண்ணும் கூட்டத்தின் நடுவில் வாழ முடியும் என்பதை மாலதியின் இச்சூழ்நிலை விளக்கும். சங்கப்பாடல் ஒன்று பெண்ணின் மனவலியை முன்னிறுத்திக் காட்டுகின்றது.

**சமூகத்தின் பார்வையில் பெண்**

பெண்களின் வாழ்க்கையை முக்கிய மூன்று நிலைகளாகப் பிரிக்கலாம். பகுத்து ஆராய்ந்தால் முதல் நிலை, மகள் இந்த நிலையில் அவள் குடும்பத்தினரின் அன்பையும், அரவணைப்பையும் கல்வியையும் பெறுகிறாள்.

இரண்டாம் நிலையில் மனைவி மருமகள், இளம் தாய் ஆகிய மூன்று முகங்களை அவள் கொண்டிருக்கிறான். இந்தக் காலக்கட்டத்தில் இன்றைய பெண்கள் பொறுப்புகளையும், பொருளாதாரச் சுமைகளையும் சுமக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள். மனஉளைச்சலுக்கு ஆளாகிறார்கள்.

மூன்றாவது முதிர்ந்த தாய் என்ற நிலையை அடைகிறாள். இந்த நிலையில் பெண்கள் குடும்பத்தினரால் புறக்கணிக்கப்பட்டாலும், சமுதாயத்தில் பாதுகாக்கப்படுகிறார்கள்.

இவைகளை எல்லாம் கணக்கிட்டுப் பார்க்கும்போது, புகுந்த வீட்டில்தான் பெண் அதிகச் சிரமங்களைச் சந்திக்கிறாள். அங்குப் புதிய உறவினர்களான கணவனது சகோதரி, தாய் ஆகியோர்களிடம் இயல்பான அன்பை வெளிப்படுத்த மருமகளாகிய அவள் தயக்கம் கொள்கிறாள். இதனைப் புரிந்துகொண்டு வழிநடத்த மாமியார் முன்வராததால் உறவில் தடுமாற்றம் ஏற்படுகிறது. முதல் கோணல், முற்றிலும் கோணல் என்ற வழக்கிற்கு ஏற்ப இறுதிவரை இந்த உறவு ஒரு நெருடலுடனே தொடர்வதைக் காண முடிகிறது.

**முடிவுரை**

காலம்தோறும் பெண்கள் தன்னைத் தானே மெழுகாய் மாற்றும் மாறுதலை ஏற்கிறார்கள். இச்சமூகம் பெண்களின் உணர்விற்கு மதிப்பளித்தால், பல நன்மைகள் இச்சமுதாயத்தில் நிகழும். போராளிகளாக இருப்பதே பெண்ணியத்தின் சாதனை வேலிகளைத் தகர்த்திடத் தொடர்ந்து போராடுவோம். பெண்களுக்கு ஏற்படக்கூடிய இன்னல்கள் யாவையும் சுமந்து கொண்டு வாழாமல் எதிர்த்துப் போராடும் மன உறுதிவேண்டும். இதனை அனைத்துப் பெண்களும் மனதில் வைத்துக் கொண்டு வாழவேண்டும் என்பதை இக்கதையின் வாயிலாக அறியமுடிகிறது.

ஆய்வுக் கட்டுரை – ஐந்து

# அண்ணாவின் செவ்வாழை – ஓர் ஆய்வு

**பெ.சாந்தி**

**முதுகலைத்தமிழ் இரண்டாமாண்டு**

**முன்னுரை**

அறிஞர் அண்ணாவின் செவ்வாழை என்னும் சிறுகதையானது மக்களுக்குச் சமுதாயத்தில் ஏற்படும் சிக்கல்களை வெளிப்படுத்திக் காட்டுகிறது. செவ்வாழை சிறுகதையின் ஆசிரியர் அறிஞர் அண்ணாதுரை. இவரின் இயற்பெயர் காஞ்சீவரம் நடராசன் அண்ணாதுரை. இவர் 1909ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15ஆம் நாள் காஞ்சிபுரத்தில் பிறந்தார். இவரின் தந்தை நடராஜன் முதலியார். தாயார் பங்காரு அம்மாள் ஆவார். இவருடைய மனைவி இராணி அம்மையார். இவர்களுக்குக் குழந்தைகள் இல்லை. அறிஞர் அண்ணா சிறந்த பேச்சாற்றல் மிக்கவர். சிறந்த எழுத்தாளர் புதினங்கள், சிறுகதைகள், அரசியல் நாடகங்கள், திரைக்கதைகள் எழுதியுள்ளார்.

**கதைக்கரு**

ஏழை மக்களுக்குப் பணக்காரர்களால் சமுதாயத்தில் ஏற்படும் சிக்கலைக் கூறுவதே இச்சிறுகதையின் மையமாகும்.

**கதாபாத்திரங்கள்**

செங்கோடன்

குப்பி

குழந்தைகள்

மூத்த மகன் கரியன்

காமாட்சி

முத்து

கரியனின் நண்பன்

எல்லப்பன்

பரந்தாம முதலியார்

பண்ணையார் மருமகள்

முத்துவிஜயா

கணக்குப்பிள்ளை

சுந்தரம்

பார்வதி பாட்டி

**கதைச் சுருக்கம்**

செங்கோடன் தன் செல்லப் பிள்ளையாகச் செவ்வாழைக் கன்றை வளர்த்து வந்தான். நாள் முழுவதும் வேலை செய்துவிட்டு வந்தாலும் முதலில்

தோட்டத்தில் உள்ள செவ்வாழைக் கன்றினைப் பார்த்துவிட்டு, அதற்கு தண்ணிர் விட்ட பிறகே, தன் குழந்தைகளைப் பார்க்கச் செல்வார்.

இதனால் செங்கோடனின் மனைவிக்குப் பொறாமையும் எரிச்சலும் ஏற்பட்டது. செங்கோடன் எப்போதும் செவ்வாழைக் கன்றைப் பற்றியே பேசிக் கொண்டு இருப்பான். தன் குழந்தைகளுக்கும் கன்றின் சிறப்பினைப் பற்றி சொல்லி பெருமையடைவான். மத்த வாழைப் பழத்தைச் சாப்பிட்டால் தான் பசி போகும். ஆனால் செவ்வாழையைக் கண்ணால் பார்த்தாலே பசி போகும் எனத் தன் மனைவியிடம் கூறி மகிழ்வார். அவருடைய குழந்தைகளும் தன்னுடன் விளையாடும். குழந்தைகளிடம் செவ்வாழை கன்றினைப் பற்றியே சொல்லிக்கொண்டு இருப்பார்கள்.

ஏழைக் குழைந்தைகள் இதைப் பற்றிதானே பேச முடியும். அம்மாவின் வைரத்தோடையோ, அப்பாவின் மோட்டாரையோ, அண்ணனின் ரேடியோவைப் பற்றியோ பேச முடியாது. இவை எல்லாம் அவர்களுக்குச் செவ்வாழை தான். பண்ணையார் வீட்டுக் குழந்தைகள் ஆப்பிள், ஆரஞ்சு எனச் சாப்பிடுவார்கள். ஆனால், ஏழைக் குழந்தைகளுக்கு இதையெல்லாம் சாப்பிட வாய்பில்லை.

ஏனெனில் நிலத்தில் வேலை செய்து பெறப்படும் நெல்லும் கூலியும், வீட்டுச் செலவிற்கே சரியாகிவிடுகிறது. அதனால் தன் தோட்டத்தில் வளரும் செவ்வாழையை நம் பிள்ளைகளுக்குக் கொடுக்கலாம் சுற்றத்தாருக்கும்

கொடுக்கலாம் எனச் செங்கோடன் நினைத்திருந்தான். சில நாட்கள் கழிந்தன. செவ்வாழை மரம் குலை தள்ளியது. இதனைக் கண்ட செங்கோடன் பெருமிதம் அடைந்தான். தான் வேலை செய்யக் கூடிய பரந்தாம முதலியார் தன் மருமகளின் கழுத்தில் உள்ள வைர மாலையைக் கண்டு கூட இவ்வளவு பெருமிதம் அடைந்ததில்லை. செவ்வாழைக் குலையைச் சரியான பக்குவம் வரும்போது குலையை வெட்டி பழுக்க வைத்து நமக்கும் குழந்தைக்கும் எதிர் வீட்டாருக்கும் நாம் கொடுக்கலாம்.

தன் வீட்டில் தன் உழைப்பில் வளர்த்த செவ்வாழைக் குலையை அனுபவிக்கவும், பிறருக்குக் கொடுக்கவும் எனக்கு உரிமை உண்டு. என் உழைப்பைச் சுரண்ட யாரும் இல்லை என மகிழ்ந்திருந்தான்.

பண்ணையாரின் நிலத்தில் உழைப்பதால் ஒன்றும் பலன் கிடைப்பதில்லை. ஒரு துண்டு நிலம் தனக்குச் சொந்தமாக இருந்தால் அவற்றின் பலன் எனக்கே கிடைக்கும். உழைப்பவர்களுக்கு நிலம் சொந்தம் என்ற நிலை வரக்கூடாதா என எண்ணுகிறார்.

செங்கோடன் இதுபோல் நினைத்துக் கொண்டு இருக்கும் போது பண்ணையாரின் மருமகள் முத்துவிஜயாவின் பிறந்தநாள் விழாவிற்கு ஏற்பாடு செய்கின்றனர். அப்போது விழாவிற்குத் தேவையான பொருட்களைச் சொல்லும் பட்டியலில் வாழைப் பழம் தேவைப்படுகிறது. பண்ணையார் கடையில் இரண்டு சீப்பு வாங்கிக்கொள் எனச் சுந்தரத்திடம் கூறினார். கடையில் எல்லாம் நாட்டு

பழம் தான் கிடைக்கிறது எனக் கணக்குப்பிள்ளை சுந்தரம் கூற, சரி அதையே வாங்கிக் கொள் நல்ல பழம் கிடைக்கவா போகிறது எனப் பண்ணையார் சொன்னதும் உடனே சுந்தரம்' செங்கோடனின் வீட்டுத் தோட்டத்தில் செவ்வாழை குலை தள்ளியுள்ளது. பழமும் அருமையாக இருக்கின்றது என்றார் பண்ணையார். குலையை எடுத்துக் கொண்டு வா என்று சொன்னார்.

செங்கோடனின் வீட்டிற்குச் சென்று சுந்தரம் நடந்த விசயங்களை எல்லாம் கூறியதும், செங்கோடனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. தான் ஆசை ஆசையாக வளர்த்த செவ்வாழைக்கு இந்தச் சுந்தரம் மரண ஓலையை எழுதிவிட்டார். செங்கோடன் நிலை குலைந்தான். வாயில் பேச்சும் வரவில்லை. கண்கள் கலங்கின. இதனை அறிந்த குழந்தைகள் அழுது புலம்பினர்.

இவற்றையெல்லாம் சகித்துக் கொண்டு பண்ணையார் கூறியவாறு செய்ய வேண்டும். இல்லையெனில் கேவலம் ஒரு வாழைக் குலையைத் தரமாட்டானா என ஊரார் என்னைத் தப்பாகப் பேசுவார்கள். பண்ணையாரிடம் தான் வேலை செய்கிறேன். அவர் கேட்டுவிட்ட பிறகு தரமாட்டேன் என்று எப்படிக் கூறுவது. இதையெல்லாம் நினைத்துக் கொண்டு அரிவாளை எடுத்துக் கொண்டு செவ்வாழை இருக்கும் இடத்திற்கு சென்று அதனை வெட்டி எடுத்துக் கொண்டு வந்து சுந்தரமிடம் கொடுத்துவிட்டு சென்றான் செங்கோடன்.

குழந்தைகள் தான் கண்ட கனவானது பலிக்காமல் போய்விட்டது என அழுதுக் கொண்டே இருந்தனர். நான்கு நாட்களுக்குப் பின் பண்ணையாரின்

மருமகள் முத்துவிஜயா கோவிலுக்குச் செல்லும் போது அவள் கையில் உள்ள வெள்ளித்தட்டில் ஒரு சீப்பு வாழைப்பழத்தை எடுத்துக் கொண்டு பிறந்தநாள் விழாவிற்காக ஏற்பாடு செய்த சிறப்பு பூஜைக்கு நடந்து செல்கிறாள்.

இதற்கு இடையில் சுந்தரம் விழாவிற்குத் தேவையான இரண்டு சீப்பு வாழைப் பழத்தை எடுத்துக் கொண்டு மற்றதை கடைக்காரனிடம் விற்றுவிட்டான். குழைந்தைகள் அழுதுக் கொண்டே இருந்ததால், குப்பி கரியனிடம் காலணாவை கொடுத்து கடையில் பழம் வாங்கி சாப்பிடு என்றாள். கடைக்குச் சென்றவன் பழம் எவ்வளவு என்றதும் ஒரு பழம் ஒரு அணாடா எனக் கடைக்காரன் கூற, அதற்கான பணம் தன்னிடம் இல்லை என்பதை அறிந்த கரியன் வேர்கடலையை வாங்கிக் கொண்டு, வீதியில் சாப்பிட்டவாரே நடந்து வந்தான். வரும் வழியில் தன் அப்பாவான செங்கோடன் வாழை மரத்தைச் சுமந்து செல்வதைக் கண்டு தன் அப்பாவிடம் இதுவும் பண்ணையாருக்கா என்றான். இல்லை இறந்துவிட்ட பார்வதி பாட்டிக்குப் பாடைக்கட்ட இதை எடுத்துச் செல்கிறேன் என்றார்.

கரியன் இதனைத் தன்னுடன் விளையாடும் குழந்தைகளிடம் வாழைக் குலையை நாங்கள் பண்ணையாருக்குக் கொடுத்தோம். மரத்தைப் பார்வதி பாட்டிக்குப் பாடையை அலங்காரம் செய்ய குடுத்து விட்டோம் எனப் பெருமையாகக் கூறினான்.

செங்கோடனின் செவ்வாழை தொழிலாளர் உலகில் சர்வ சாதாரணச் சம்பவம் என அறிஞர் அண்ணா அவர்கள் அச்சிறுகதையை முடிக்கிறார்.

**சமுதாயச் சிக்கல்**

இக்கதையில் உழைப்புச் சுரண்டலே சமுதாய சிக்கலாக அமைந்துள்ளது. ஒருவருடைய உழைப்பானது மற்றொருவருக்குப் பலனாக அமைகிறது. அதாவது, செங்கோடன் தன் வீட்டின் பின்புறமாக உள்ள தோட்டத்தில் விளைந்துள்ள செவ்வாழையைக் கணக்குப் பிள்ளை சுந்தரத்தின் சூழ்ச்சியால் அதனைச் செங்கோடனின் குடும்பம் அனுபவிக்க முடியாமல் ஆனது.

உழைப்புச் சுரண்டல் காலந்தோறும் சமூகத்தில் நடைபெறக் கூடிய ஒன்றாகும். இச்சிறுகதை ஆண்டான் அடிமைச் சமுதாயச் சிக்கல்களை வெளிப்படுத்தியுள்ளது. ஆண்டான் அடிமைச் சமுதாயச் சிக்கல் என்பது அதிகாரப் பலத்தைப் பயன்படுத்தி ஏழை மக்களுக்குச் சிக்கலை ஏற்படுத்தும் சமுகத்தை எடுத்துக் காட்டுகிறது.

செங்கோடனின் செவ்வாழையானது தொழிலாளர்கள் உலகில் சர்வ சாதாரணம் என்ற வரியின் மூலம் தொழிலாளர்களின் ஆழமான சிக்கலை அறியலாம்.

அதிகாரப் பலத்தினை உடைய ஒருவன் பிறருடைய துன்பத்தில் இன்பத்தைக் காணுகின்றான். அதாவது செவ்வாழைச் சிறுகதையில் இடம்பெறும் கணக்குப்பிள்ளை சுந்தரம் போன்ற மனிதர்களே ஆவார்கள்.

உழைக்ககூடியவனுக்கு இடைத்தரகர்கள் இல்லாமல் உழைப்பவர்கே அவ்வுழைப்பின் பலனை முழுமையாகப் பெற வேண்டும். உழைப்புச் சுரண்டலை எந்தச் சலனமும் இல்லாமல் முதலாளிகள் எப்போதும் செய்துக் கொண்டே தான் இருக்கின்றனர் என்ற பல சிக்கல்களை இச்சிறுகதை உடைத்துக் கூறுகிறது. இவைகள் மட்டுமல்லாமல் ஏழைக் குழந்தைகள் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தங்களைத் தேற்றிக் கொள்கிறார்கள் என்பதையும் இக்கதையின் மூலம் அறியமுடிகிறது.

**சிறுகதையின் நோக்கம்**

அதிகாரமாக இருந்தாலும், தொழிலாளர்களின் வர்கமாக இருந்தாலும் உழைப்பின் பலனானது உழைப்பவர்களுக்கே சேர வேண்டும் என்பதே இச்சிறுகதையின் நோக்கமாகும்.

மனிதனை மனிதனாக மதிக்க வேண்டும். அதிகாரத்தினைப் பயன்படுத்தி மக்களை துன்புறுத்தும் நிலை மாற வேண்டும். எல்லோரும் சமம் என்றும் ஏற்றத்தாழ்வுகள் இல்லாதச் சமூகமாக மாற வேண்டும். ஒருவரின் உழைப்புக்கு உயர்வு கொடுக்கும் சமூகமாகவும் மாற வேண்டும் என்பதே இக்கதையின் நோக்கம்.

**படைப்பாளரின் படைப்புத்திறன்**

படைப்பாளர் இக்கதையில் செங்கோடனின் முற்போக்கு சிந்தனையையும், அவருடைய இரக்கக் குணத்தையும் மிகத் தொளிவாக வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

முதலாளிகளின் ஆளுமையும் அவர்களின் சுயநலமிக்கத் தன்மையையும் புலப்படுத்துகிறது. முதலாளிகள் சும்மா இருந்தாலும் உடன் இருப்பவன் அவரைத் தூண்டிவிடும் தூண்டு கோலாகவே செயல்பட்டு ஏழைகளைப் பெரிதும் துன்பம் அடையச் செய்யும் அவலநிலையும் ஏற்படுகிறது.

தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையில் உள்ளவர்கே இதில் பெரும் லாபத்தையும் பயனையும் அடைகின்றனர். அவர்கள் ஒருபோதும் உழைப்பவர்களின் சூழ்நிலைகளைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை என்பதையும் இச்சிறுகதையின் போக்கிலே வெளிப்படையாக அனைவராலும் அறிய முடியும்.

**முடிவுரை**

செவ்வாழை என்ற சிறுகதையின் மூலமாக உழைப்பவர்களை ஏமாற்றாமல் அவர்களுக்கு உரிய பலனை எந்த ஓர் இடையூறு இல்லாமல் கிடைக்க வேண்டும் என்பதையும் தொழிலாளிக்கு ஏற்படும் உழைப்புச் சுரண்டல், முதலாளிகளின் அதிகாரம், ஏழைக் குழந்தைகளின் ஏக்கம், தொழிலாளி வாழ்வில் உயர போராட்டம் எனச் சாமானியன் எதிர்கொள்ளும் சமூகச் சிக்கல்களை இக்கதை விளக்குகிறது.

தமிழால் தழைக்கும் உலகு

# நற்றமிழ்க்குடில்
## மாணவ இலக்கிய மின்னிதழ்




தமிழ்த்துறை
சோகா தமிழ்ப் பேரவை வெளியீடு
சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.



செப்டம்பர் 2023, குடில் 5, விருந்து 18